| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **353/2010** |
| தேதி | : | **06.03.2026.** |
| பெயர் | : | **லோகேஸ்வரி (காவல் ஆய்வாளர்)** |

**பி.வா.த.சா.1 (DW2) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**பி.வா.த.சா.1. (DW2) - குறுக்கு விசாரணை:**

1) நான் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு தற்போது மாவட்ட குற்றப்பிரிவு 2ஆக செயல்பட்டுவருகிறது. சாட்சியிடம் அழைப்பாணை காண்பிக்கப்பட்டது அதன் அடிப்படையில் தான் சாட்சி சொல்ல வந்திருக்கிறார் என்று கூறினார். மேற்சொன்ன அழைப்பாணையில் நா.க. நம்பர் k2/625/16697/2012/2012 சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து வர உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்கள் தற்போது என்னுடைய நிலையத்தில் இல்லை. அது சட்டத்திற்குட்பட்டு அழிக்கப்பட்டது. அது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட பதில் பிரதிவாதியால் வரவழைக்கப்பட்ட **நீமதசாஆ 1** ஆகும்.

2) மேற்சொன்ன ஆவணத்தில் serial no. 10 ல் உள்ள ஆவணங்கள் தான் இந்த அழைப்பாணை மூலம் கேட்கப்பட்டது. அது அழிக்கப்பட்ட விவரங்கள் தான் பிரதிவாதியால் வரவழைக்கப்பட்ட நீமதசாஆ 1 சான்று ஆவணமாக இணைக்கப்பட்டது. கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் என்பது கோப்புகளின் ஆண்டுகளை குறிக்கிறது. மேற்சொன்ன கடிதத்தில் உள்ள அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டுவிட்டது. எனக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்ட ஆவணங்கள் தற்போது எங்கள் நிலையம் வசம் இல்லை.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் இந்த நீதிமன்ற அழைப்பாணை எனது உயர் அதிகாரிக்கு வழங்கப்பட்டது அவர் உத்தரவு படி சாட்சி கூற வந்துள்ளேன். இரண்டு அழைப்பாணைகளும் எனது நிலையத்திற்கு சார்வு செய்யப்பட்டு அது முறையாக கையொப்பம் இடப்பட்டது. ஒரு அழைப்பாணை 2023 மற்றொன்று 2025 ம் ஆண்டு சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். இரண்டு அழைப்பானைகளும் எனது உயர் அதிகாரியான மாவட்ட கண்காணிப்பாளருக்கு தான்

கொடுக்கப்பட்டது. எனக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நா.க. நம்பர் k2/625/16697/2012/2012 சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து வர உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். சாட்சி ஆவணம் கடிதத்தில் மேற்சொன்ன கோப்புகளில் நகல்கள் கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கடிதத்துடன் இணைத்துள்ள பட்டியல் ஆனது அழிக்கப்பட்ட ஆவணங்களின் சம்பந்தப்பட்ட குறிப்புகள் ஆகும். அழிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் நடப்புதாள் என்று எனது உயர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நடப்பு தாள்கள் 3 வருடம் வரை எங்களது பாதுகாப்பில் இருக்கும. பிறகு மாவட்ட கண்காணிப்பகாளர் உத்தரவு பெற்று அழிக்கப்படும். K2 என்ற குறியீடு நடப்பு தாள்களை குறிக்கும். அது நான் கொடுத்த பட்டியலில் serial No. 10 குறிப்பிடப்பட்டுள்ளது.

2) நடப்பு தாள்கள் சம்பந்தமான பதிவேடுகள் அழிக்கப்பட்டிருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த பட்டியலில் 3வது Column ல் குறிப்பிடப்பட்டுள்ள காலங்களில் அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டிருக்கும். அழைப்பாணையில் குறிப்பிடபட்டுள்ள ஆவணங்கள் தற்போது கைவசம் இருந்திருந்தால் அது சம்பந்தமான சாட்சியம் என்னால் அளித்திருக்க முடியும் என்றால் சரிதான். அழிக்கும் உத்தரவு மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களால் பிறப்பிக்கப்படும்.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கையொப்பம் : Sd/. லோகேஸ்வரி.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.